செய்தி வெளியீடு எண்:811 நாள்:29.09.2021

**சேலம் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கம்.

சிறு, குறு நிறுவனங்களை நடத்தி வரக்கூடிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கொரோனா என்ற பெருந்தொற்று மக்களின் உடல்நலத்திலும் மனநலத்திலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது போல மக்களின் வாழ்வாதாரத்திலும் பொருளாதாரத்திலும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அதிலும் குறிப்பாக, சிறு, குறு நிறுவனங்கள் அதிகமான நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையைப் பெற்றது.

இப்படிப்பட்ட சூழலையும் கொரோனாவுடன் சேர்த்து பொருளாதாரப் பாதிப்பையும் வென்றவர்கள் தான் இந்த சிறு, குறு நிறுவனங்களைச் சார்ந்திருக்கக்கூடிய நீங்கள் என்பது நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில், உங்கள் அனைவரையும் நான் மனதார பாராட்டுகிறேன். இனி நடப்பது எல்லாம் நல்லதே என்ற எண்ணத்துடன் நாம் செயல்பட்டாக வேண்டும்.

இப்படிப்பட்ட மிகுந்த நெருக்கடி சூழ்ந்த இந்த நேரத்தில், கொரோனா நிவாரண நிதியை தமிழ்நாடு அரசு திரட்டியது. அப்போது மனமுவந்து தொழில் நிறுவனங்களும் தொழில் அதிபர்களும் அவர்கள் எந்தளவிற்கு ஒத்துழைப்பு கொடுத்தார்கள் என்பதை நான் நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன்.

இந்த ஆட்சி அமைந்து நான்கு மாதங்கள்தான் ஆகி இருக்கிறது. தேர்தல் நேரத்தில், எல்லா கட்சிகளும் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று வாக்குறுதிகளை வழங்குவது உண்டு. நான் அதைப் பற்றியெல்லாம் விமர்சனம் செய்ய, அரசியல் நையாண்டி செய்ய தயாராக இல்லை. நம்மைப் பொறுத்தவரை நான் சொல்ல விரும்புவது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதியை சொன்னது மட்டுமல்ல, புத்தமாகவே அச்சிட்டு மக்களிடத்தில் 505 வாக்குறுதிகளை நாம் வழங்கியிருக்கிறோம். அதில், இந்த நான்கு மாதங்களுக்குள் 202 வாக்குறுதிகளை அறிவிப்புகளாக மட்டுமல்ல, ஆணைகளாகவும் நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்ற வாக்குறுதிகளை படிப்படியாக நிதி சூழ்நிலையைக் கருதி அதை முறையாக ஆய்வு செய்து, அதிலிருக்கக்கூடிய சில சங்கடங்கள், குளறுபடிகள், முறைகேடுகள்

இவற்றையெல்லாம் சரிசெய்து, படிப்படியாக நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றிக் காட்டுவோம் என்கிற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த 202 வாக்குறுதிகளை நீங்கள் உற்று பார்த்தீர்களானால் சொன்னது மட்டுமல்ல சொல்லாத வாக்குறுதிகள் கூட இதில் அடங்கியிருக்கிறது என்பதுதான் எங்களுக்கு பெருமை. சொன்னது, சொல்லாதது என்கிற வித்தியாசம் இல்லாமல் எது நடக்கிறதோ அதை செய்வது எங்களுடைய கடமையாக நாங்கள் கருதிக்கொண்டு இருக்கிறோம்.

பெரும்பாலும் சிறு,குறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கூடியிருக்கும் கூட்டம் என்கிற காரணத்தால், அந்த துறைக்கு, அதாவது உங்கள் துறைக்குச் செய்யப்பட்ட ஒரு சில சாதனைகளை மட்டும் நான் உங்களிடத்தில் பட்டியலிட விரும்புகிறேன்.

* ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு மாதங்களில், ரூ.168 கோடி (முதலீட்டு மானிய நிதியில் 60%) விடுவிக்கப்பட்டுள்ளது.

• நிறுவனங்களை இயக்குவதற்கான உரிமம், தீயணைப்பு உரிமம் உள்ளிட்ட 15 உரிமங்களின் புதுப்பித்தல், அதனுடைய கெடு டிசம்பர் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

• வங்கிகளில் இருந்து குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கடன் பெறும்போது, கடன் ஆவணங்களை இணைய வழியில் பதிவு செய்வதற்கு வழிவகை செய்யக்கூடிய வகையில் சட்டப்பேரவையிலேயே அந்த மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

• வான்வெளி, பாதுகாப்பு, மருந்தியல், பெட்ரோகெமிக்கல், உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் மின்வாகனங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் 5 மிகப்பெரிய தொழிற்கொத்துகள் ஒவ்வொரு துறைக்கும் தலா 500 கோடி ரூபாய் முதலீட்டில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

• வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எளிதாகக் கடன்பெறுவதற்கு மாநில அளவில் கடன் உத்தரவாதத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

• ஐந்து புதிய தொழிற்பேட்டைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

• சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிதும் பயன்பெறக்கூடிய வகையில் டெல்டா மாவட்டங்களை உள்ளடக்கிய வேளாண் - தொழில் வழித்தடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

• சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையை மதிப்பாய்வு செய்வதற்கான வழி வகைகளை பரிந்துரைக்க முனைவர் சுந்தரதேவன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

• நான்கு சேகோசர்வ் கிடங்குகள் ரூபாய் 45 கோடியில் நவீனப்படுத்தப்படுவதோடு, ரூபாய் 40 கோடியில் புதிய கிடங்கு ஒன்று அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

• கோயம்புத்தூர் மற்றும் சென்னையில், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனப் பணியாளர்களுக்கான குறைந்த விலையில் வாடகை வீடுகள் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

• புதிய நிறுவனங்களுக்கு - 20 இலட்சம் ரூபாய்க்குக் குறைந்த கொள்முதல்களில் - முன் அனுபவம் மற்றும் முந்தைய விற்பனை மதிப்பு போன்ற ஒப்பந்த நிபந்தனைகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

• ஏற்றுமதி மற்றும் முதலீடுகளுக்கு உதவும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன ஏற்றுமதியாளர்களுடன் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலமாக, 240 கோடி ரூபாய் முதலீடும் 2 ஆயிரத்து 545 வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

• தமிழ்நாட்டின் 2000 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை சிறந்த ஏற்றுமதியாளர்களாக உயர்த்தவும், அவர்கள் தங்கள் பொருட்களை இணையத்திலும் வெளியிலும் சந்தைப்படுத்துவதை மேம்படுத்தவும் ப்ளிப்கார்ட் - வால்மார்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

இவை அனைத்தும் நான்கு மாதத்தில் நிறைவேற்றப்பட்டவை ஆகும். இதுபோன்ற திட்டங்கள் வரிசையாக அணிவகுக்கத் தயாராக இருக்கிறது. சிறு, குறு நிறுவனங்களை வளர்த்தெடுக்கத் தேவையான அனைத்தையும் இந்த அரசு செய்யும் என்ற உறுதியை இக்கூட்டத்தின் மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, சேலம் மாவட்டமானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அதிகம் இருக்ககக்கூடிய மாவட்டம் ஆகும். தமிழ்நாட்டின் முன்னேறிய தொழில் முனைவோர் நிறைந்த மாவட்டங்களில் சேலம் மாவட்டமும் இருக்கிறது. மிகவும் மையமான மாவட்டமாகவும் இது அமைந்துள்ளது.

பெங்களூரு, கோயம்புத்தூர், திருச்சி, சென்னை ஆகிய மாநகரங்களுடன் தேசிய நெடுஞ்சாலை மற்றும் இரயில் தடம் வழியாக நன்கு இணைக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. உள்ளூர் விமான நிலையமும் செயல்படுகிறது.

* சவ்வரிசி மாவு, கைத்தறி உள்ளிட்ட ஜவுளிகள், கயிறுபொருட்கள், வெள்ளிக்கொலுசுகள், பிவிசி மற்றும் எஃகுப் பொருட்கள் உற்பத்தியில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

*22,256 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதன் மூலமாக 1,86,128 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

* சேலம் உருக்காலை, JSW உருக்காலை, கெம்பிளாஸ்ட் சன்மர் போன்ற பெரிய நிறுவனங்கள் இங்கு இருக்கிறது.

* 125க்கும் மேற்பட்ட நூற்பாலைகள், விசைத்தறி அலகுகள், ஜவுளி அலகுகள் இங்கே இருக்கின்றன.

* மகளிருக்கான தொழிற்பேட்டை உள்ளிட்ட ஆறு சிட்கோ தொழிற்பேட்டைகள் மற்றும் 540 குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஆகியவை இங்கே செயல்பட்டு வருகின்றன.

* சென்னை, ஒசூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களை உள்ளடக்கி இந்திய அரசால் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இராணுவத் தளவாடத் தொழில் உற்பத்தித் தடத்தில் சேலம் ஒரு முக்கிய முனையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

* பாராசூட் துணிகள், இராணுவச் சீருடைத் துணிகள் போன்ற நுட்பமிகு துணிகளைத் தயாரிக்கவும், ஹெலிகாப்டர் பாகங்களை ஒன்றாகப் பொருத்தவும் சேலத்தில் அதிகமான வாய்ப்பு உள்ளது.

* ஒரு மாபெரும் உணவுப்பூங்கா (பி.லிட்) அமைப்பதற்கென பெரிய சீரகபாடியில் 56.81 ஏக்கர் நிலம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் கண்டறியப்பட்டுக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

* கஞ்சிநாயக்கன்பட்டியில் 11 ஏக்கர் நிலத்தில் வேளாண் பொருள்சார் தொழிற்கொத்து வரவுள்ளது. இதற்காக, நிலங்களைச் சமன்படுத்தும் பணிகள் முடிவடைந்திருக்கிறது. அலுவலகம் மற்றும் கிடங்குக் கட்டடங்கள் அமைப்பதற்கான பணிகள் சேலம் மார்க்கெட்டிங் குழுவால் தொடங்கப்பட்டுள்ளது.

* சேலம் மாவட்டத்தில் ரூ.247.17 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்புடைய சவ்வரிசித் தொழிற்கொத்து ஒன்றும்; ரூ.501.10 இலட்சம் திட்ட மதிப்புடைய கயிறு தொழிற்கொத்துகள் இரண்டும்; ரூ.1532.74 இலட்சம் திட்ட மதிப்புடைய எஃகுத் தொழிற்கொத்து ஒன்றும் நிறுவப்பட்டுச் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

* 1333.96 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்புடைய விசைத்தறித் தொழிற்கொத்து, 14446.33 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அறைகலன் தொழிற்கொத்து, 1346.50 இலட்சம் ரூபாய் மதிப்பில் அச்சுத் தொழிற் கொத்து, 248.96 ரூபாய் மதிப்பிலான வெள்ளிக் கொலுசுத் தொழிற்கொத்து ஆகியவை செயல்பாட்டுக்கு வர உள்ளன.

* தம்மம்பட்டியில் மர வேலைப்பாடுகள் தொழிற்கொத்து, கொங்கணாபுரத்தில் வெல்லத் தொழிற்கொத்து, ஜலகண்டபுரத்தில் விசைத்தறித் தொழிற்கொத்து ஆகியவற்றை நிறுவுவதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

* சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ், 111 பயனாளிகளுக்கு 339.32 இலட்சம் ரூபாய் அளவிலான தொகை அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

* முதலீட்டு மானியம், குறைந்த மின்னழுத்த மின் கட்டணச்சலுகை, வரிச்சலுகை ஆகியவற்றின் கீழ் 37 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 178.67 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- இவை அனைத்தையும் நான் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு தொழில் நிறுவனங்கள் மீது அதிலும் குறிப்பாக சிறு, குறு தொழில் நிறுவனங்கள் மீது வைத்திருக்கக்கூடிய அக்கறையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இது போன்ற நல்ல பல செயல்களைத் தொடர்ந்து செய்வோம். அரசுக்கு, உங்கள் கோரிக்கைகளைத் தயங்காமல் கேளுங்கள். அதனைப் பரிசீலித்து படிப்படியாக நிறைவேற்றித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இரண்டு மிகப் பெரிய மாநாடுகளை சென்னையில் நடத்தினோம்.

* ஒன்று முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற ஒரு மாநாடு நடத்தினோம்.

* ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு என்பது இன்னொரு மாநாடு நடத்தினோம்.

இந்த மாநாடுகள் மூலமாக பல்லாயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது. தொழில் துறையானது செழிக்க இருக்கிறது. தொழில்துறை செழித்தால் அனைத்துத் துறையும் செழிக்கும். அதன் மூலமாக நாடும் செழிக்கும்.

அத்தகைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் அதிபர்கள் அனைவருக்கும் எனது நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் தொடர்ந்து சொல்கிறேன். இந்த அரசு என்பது தனிப்பட்ட என்னுடைய அரசு அல்ல, உங்களுக்கு பாடுபடக்கூடிய, பணியாற்றக்கூடிய அரசுதான் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். இது உங்கள் அரசு. உங்கள் அரசுக்கு உரிமையோடு கோரிக்கை வையுங்கள், அதை செயல்படுத்துவதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபட்டு, நிச்சயமாக நாங்கள் துணை நிற்போம். அதுபோன்று நீங்களும் எங்களுக்கு துணை நிற்க வேண்டும் என்று அன்போடு கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக தொழிற் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன். கௌதம் சிகாமணி, திரு.எஸ்.ஆர். பார்த்திபன், திரு.ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், திரு. இரா. அருள், திரு.எஸ். சதாசிவம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.வி. அருண்ராய், இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ. கார்மேகம், இ.ஆ.ப., தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர், சேலம் மாவட்ட சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் பல்வேறு சங்க நிர்வாகிகள், விசைத்தறி மற்றும் வெள்ளிக் கொலுசு தொழில்முனைவோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9